

கொங்கு வரலாற்றில் ஒப்பில்லாத வர் காளிங்கராயர். இவர் இ.பி 13ம் நூற்றாண்டிலேயே முப்போகம் விளையும் வண்ணம் அணை கட்டி, கால்வாய் வெட்டி, அவற்றை நாட்டுடமையாக்கினார்.

வெள்ளோடு கனகபுரத்தை சேர்ந்த நஞ் சையகவுண்டர் மகன் லிங்கையன். இவர் வீரபாண்டியன் (கி.பி.1265 - 1280) ஆட்சியில் தளபதியாகவும் அமைச்சராகவும் இருந்த தார். கொங்கு நாட்டை நிர்வகிக்கும் உரி மையை பெற்ற இவர், வெள்ளோட்டை தலைமையிடமாக கொண்டவர்.

வெள்ளோட்டைச் சுற்றி கிழக்கே காவிரி, தெற்கே நொய்யல் மற்றும் வடக்கே பவானி என நதிகள் ஓடினாலும் வெள்ளோடு ஒரு மேட்டுநில வறண்ட பூமியாகவே இருந்தது. தனது நாட்டினை வளப்படுத்த எண்ணிய காளிங்கராயர் வடக்கே பவானியிலிருந்து ஒரு கால்வாய் மூலம் தம் நாடு நெடுகிலும் நீர்பாய்ச்சி இறுதியில் காவிரியில் கலக்கு மாறு ஒரு கால்வாய் வெட்ட எண்ணினார்.

ஆகவே, பவானி ஆற்றில் அணை கட்டி பூந்துறை நாட்டில் சாமை விளையும் காடெல்லாம் சம்பா விளையும் பூமியாக மாற்ற எண்ணினார்.

முதலில் பவானி ஆற்றில் ஓர் அணை கட்டி, நீரினைத் தேக்கி பிறகு அந்நீரினை கால்வாய் மூலம் தன் நாடு வழியாக செல்லுமாறு திட்டம் வகுத்தார். இதற்கென வீரபாண்டியன் உதவி, நாட்டில் விதித்த காளிங்கராயர் விதியோகம் என்ற வரி, குடும்ப பணம் ஆகியவற்றால் ஊராட்சி கோட்டை மலையையும், கல் கொண்டு வரும் வழியையும் விலைக்கு வாங்கி 12 ஆண்டு களில் கால்வாய் மற்றும் அணைக்கட்டை கட்டி முடித்தார்.

கால்வாய் நீர் உடனடியாக விரைந்து செல்லாத வண்ணம் பாம்புபோல வளைத்து செல்லுமாறு கட்டியதால் தண்ணீர் நின்று மெதுவாக சென்றது. இதனால் நிலத்தடி நீரும் பராமரிக்கப்பட்டது. நாடும் வளம் பெற்றது.

சில ஆண்டுகளில் பாண்டியர் ஆட்சி போய் போசளர் ஆட்சி கொங்கு நாட்டில் ஏற்பட்டது. இவ்வாட்சியில் தனக்கு உரிய மரியாதை இல்லை என்பதால் காளிங்க ராயர் தன் சொந்த நிலங்களை வளமாக் கத்தான் கால்வாய் வெட்டினார் என்ற சொல்லும் உண்டானது.

தாங்கள் செய்த அறச்செயலை தானோ தன் சந்ததியினரோ பயன்படுத்துவது நல்ல தல்ல என்று எண்ணி அணையையும் கால் வாயையும் நாட்டுடமை ஆக்கி விட்டு, "இனி நானோ என் வழிவந்தவர்களோ இந்த கால்வாயின் தண்ணீரை பயன்படுத்தமாட் டோம்" என்று சத்தியம் செய்துவிட்டு தான் வாழ்ந்த வெள்ளோட்டை விட்டு காவடிக்கா நாட்டில் தன் மாட்டுப் பட்டிகளுக்கு தண் ணீர் ஊற்றுக் குழிகள் (ஊத்துக்குளி) இருந்த இடத்தில் புது ஊர் ஏற்படுத்தி அங்கு சென்று வாழ்ந்தார்!

அந்த இடமே இப்போதைய பொள்ளாச்சி அருகே உள்ள ஜமீனான ஊத்துக்குளி!

பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளியில் அரண்மனை என்றாலே சிறு குழந்தையும் கை காட்டும். தான், கட்டிய வாய்க்கால் நீரைத் தன்னுடைய சந்ததியினர் யாரும் பயன்படுத்த மாட்டார்கள் என்று அன்று கொடுத்த வாக்குறுதியை காளிங்கராய ரின் வாரிசுகள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

இப்போதைய ஜமீன் ஊத்துக்குளியில் காளிங்கராயன் பரம்பரையினர் 10 ஊர்க ளுக்கு அதாவது ஊத்துக்குளி, முத்தூர், போடிபாளையம், குளத்தூர், சேர்வைக் காரன்பாளையம், ராசிசெட்டிபாளையம், ஐயம்பாளையம், நல்லூர்த்துக்குளி, குமா ரபாளையம், திம்மங்குத்து ஆகிய ஊர்க ளுக்கு வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

காளிங்கராயர் மற்றும் சமத்தூர் ஜமீன்க ளுக்கு இடையில் பெண்ணெடுத்துப் பெண் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.

அரண்மனைக்குள் நுழைந்தவுடன் நம்மை வரவேற்பது பாடம் செய்யப்பட்ட சிறுத்தையும், கரடியும்தான். ஊத்துக்குளி ஜமீன் முத்திரை இரு தந்தங்களுக்கு நடுவில் வைக்கப்பட்டுள்ளது.

கே.என்.சிவராமன்

பல்வேறு வகையான மான் கொம்புக ஜமீன்தாரரின் மாட்டு வாகனங்கள், ஆ இலேயர் வழங்கிய சிம்மாசன இருக்கை ஆகியவை இன்றும் பாதுகாக்கப்படுகின்றன

என தன் முகநூல் பக்கத்தில் நெகிழ்ந பதிவு செய்திருக்கிறார் சக்தி பிரகாஷ். அ துடன் நீர்மேலாண்மைக்கு இன்றளவிலு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக காளிங்க யன் கால்வாய் விளங்குவதாகச் சொல் இன்னொரு பதிவையும் எழுதியிருக்கிறார்.

கொங்குநாடு நீர்வேளாண்மையில் சிறந்து விளங்கியது. இதற்கு காளிங்கராயன் அணை மற்றும் காளிங்கராயன் கால்வாய் சிறந்த எடுத்துக்காட்டு. பூந்துறை நாட்டை சேர்ந்த காளிங்கராயர், வற்றாத ஜீவ நதியான காவே இருந்தும் தன் நாடு வறட்சியால் வாடுவதை கண்டு கவலையுற்றார்.

பூந்துறை நாடு, மேடு பள்ளமான குறிஞ்சி நிலம். காவிரி மேடான பகுதியில் ஓடியதா அந்நீரை பயன்படுத்த முடியவில்லை. எனவே பூந்துறை நாட்டின் வடக்குப் பகுதியில் ஓடு காவிரியின் உபநதிகளில் ஒன்றான பவா யாற்றில் அணை கட்டி கால்வாய் மூல தன்னாட்டை முடிந்தவரை வளப்படுத்த எண்ணினார்.

இதனையடுத்து கி.பி.1283ம் ஆண் உதயமானதே காளிங்கராயன் கால்வாய்.

நீலகிரி மலைத்தொடரில் தோன மேட்டுப்பாளையம் அருகே சமவெளியை பவானி ஆறு அடைகிறது. பின்பு அது பவா சாகர் அணையை அடைகிறது. அங்கிருந் கோபி வழியாக பாய்ந்து பவானி நகரி கூடுதுறை என்னும் இடத்தில், காவிரியுட சங்கமிக்கிறது.

கூடுதுறையில் சங்கமம் ஆவதற்கு ஒரு மைல் முன் கட்டப்பட்டதுதான் காளிங்கராயன் தடுப்பணை.

பவானி ஆற்றில் தோப்புக்குக் கிழக்கே மான ஆற்றுப் பகுதியில் தண்ணீர் செல்லா முறியன் அணை தடுத்து, மேற்குப் பக்கமுள காளிங்கராயன் அணை பக்கம் அனுப்பிவி பவானி ஆற்றின் கடலே

காளிங்கராயன் இல்லம்' என்றே பெயர் வைக்கப்பட்டுள்ளது.

மிக எளிய அமைப்பை திட்டமிட்டு 725 ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்த பொறியியல் அறிவுடன் கட்டி முடித்த அணையும் கால் வாயும் காளிங்கராயன் புகழ் பாடி சந்திர சூரியர் உள்ள வரை நின்று நிலைக்கும்...

இது சாம்பிள்தான். இப்படி சக்தி பிரகாஷ் மட்டும்மல்ல... கொங்குப் பகுதியைச் சேர்ந்த பலரும் காளிங்கராயன் புகழ்பாடுகிறார்கள்.

ஓர் எட்டு கொங்குப் பகுதிக்கு சென்று வரலாமா..?

(தொடரும்)